# வட மாகாண சபை

## வட மாகாணத்தின் கீழுள்ள வாகன திருத்த நிலையங்களை பதிவு செய்தல் மற்றும் தரப்படுத்தலுக்கான அழைப்பிதழ் - 2026/2027

## NP/09/0A&P/08/11/Reg.Gen/2025

1. வட மாகாணத்தின் கீழுள்ள வாகன திருத்த நிலையங்களை தரப்படுத்தலுக்கு ஏதுவாக பதிவு செய்யப்பட்ட வாகன திருத்த நிலையங்கள் மற்றும் ஆர்வமுள்ள வாகன திருத்தகங்கள், மோட்டார் வாகன பழுதுபார்ப்பு நிலையங்கள் மற்றும் வாகன பராமரிப்பு சேவை வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட சேவை வழங்குநர்கள் மற்றும் ஆர்வமுள்ள சேவை வழங்குநர்கள் இவற்றுக்கான வழிகாட்டல் ஆவணங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்களை பிரதிப் பிரதம செயலாளர் - நிதி அலுவலகம், வட மாகாண சபை, A9 வீதி, கைதடி எனும் முகவரியில் 2026 ஜீன் 17 ஆம் திகதி முதல் 2026 ஜீலை 08 ஆம் திகதி வரை அலுவலக வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 500.00 இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். கட்டணம் பணமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். வழிகாட்டல் ஆவணம் மற்றும் படிவங்கள் தொடர்பான ஏதேனும் விளக்கங்கள் மற்றும் சந்தேகங்களை 021 2213540 தொலைபேசி இலக்கம் மூலம் கேட்கப்படலாம். மேலும், அவை தொடர்பாக திட்டமிடப்பட்ட கலந்துரையாடலின் போது பரிசீலிக்கப்படும்.

3. இது தொடர்பான முன் விளக்க கலந்துரையாடானது 2026 ஜீன் 30 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

4. முழுமையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ பிரதிப் பிரதம செயலாளர் - நிதி, வடக்கு மாகாணம், A9 வீதி, கைதடி எனும் முகவரிக்கு 2026 ஜீலை 08 ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பிரதம செயலாளர்,**
**வட மாகாண சபை,**
**A9 வீதி,**
**கைதடி.**